# சந்தேக நிவாரணி
## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

## 1. குருவும் சிஷ்யனும்

**பக்தன் :** சுவாமி, ஆத்யாத்மீக மார்க்கத்தில் நாங்கள் அறியாத விஷயங்களைப் பற்றித் தங்களை வினவ அநுமதிக்கப் பிரார்த்திக்கிறேன்.

**சுவாமி :** யாதொரு தடையுமின்றி கேட்கலாம். நீங்கள் அறியாத விஷயங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைக்கவே நானிருக்கிறேன். சந்தோஷத்துடன் கேளுங்கள். சிரத்தையுடன் கேட்டறிந்து கொள்பவருக்கு எடுத்துரைக்க நான் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறேன்.

**பக்தன் :** பெரியவர்கள், அல்லது குருமார்களின் பேச்சுக்குக் குறுக்குக் கேள்விகள் கேட்பது தவறு எனக் கூறுகின்றனரே அது சரியா, தவறா?

**சுவாமி :** அது தவறே. சீடன் தன் குருவை நாடிக் கேளாமல் வேறு யாரைக் கேட்டறிய முடியும். அவனுக்குச் சகலமும் குருவே. தன் சகல விஷயங்களையும் குருவினிடம் ஆலோசித்து அறிந்துகொள்வது நன்று.

**பக்தன் :** பெரியோர் சொல்லும் வார்த்தைகளைச் சிரத்தின்மேற் தாங்கி நடத்தல் வேண்டும் ; மறுமொழி கூறுவது தவறு என்பவை பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

**சுவாமி :** அப் பெரியோரிடம் உனக்குப் பூரண நம்பிக்கையும், அவர்கள் வார்த்தையில் மதிப்பும் ஏற்படும்வரை அவருடைய ஆக்ஞையைச் சிரத்தின்மேல் தாங்கி நடப்பதென்பது உன்னாலாகாத காரியமாகும். அந் நிலையில் அக் கட்டளைக்குச் சரியான பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் தவறல்ல.

**பக்தன் :** சுவாமி, உலகில் யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது ! எல்லாம் மோசமாக உள்ளதே! எவரை நல்லவரென எண்ணுகின்றேமோ அவரே கெட்டவராயிருக்க எப்படி நம்பிக்கை ஏற்படும்?

**சுவாமி :** பேதையே! இவ்வுலகிலேனும் சரி, வேறெவ் வுலகிலும் பிறரை நம்ப வேண்டிய அவசியமென்ன ! முதலில் உன்னையே நீ நம்பு. பிறகு தெய்வத்தை நம்பு. இவ் விரு நம்பிக்கையும் பூரணமாக இருப்பின் எவ்வித நன்மையோ தீமையோ உன்னைப் பாதிக்காது.

**பக்தன் :** சிற்சில சமயங்களில் பகவானின் மீதும் நம்பிக்கை குறைவதன் காரணமென்ன ?

**சுவாமி :** ஒருவன் மாயையில் மூழ்கி, வெளி உலக இச்சைகளை அடைய முடியாமல் தோல்வியுறும்போது ஆண்டவனின் மீது அவநம்பிக்கை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இச்சைகளை அகற்றி ஆத்மீக வளர்ச்சியையே விரும்பி, அதையே உன் நோக்கமாகக் கொண்டால், அவ் விச்சைகளினால் பாதிக்கப் படமாட்டாய். இல்லாவிடின் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் உனக்குச் சந்தேகம் ஏற்படும். இதற்குச் சர்வேஸ்வரனின் மீது நம்பிக்கை ஏற்படவேண்டியதவசியம். இன்றேல், எச் சிறு விஷயத் திலும் சந்தேகமே விளையும்.

**பக்தன் :** அப் பரமாத்மாவின் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள்ளும்வரை, நற்குணங்களைப் படைத்த பெரியோர்களின் கூட்டங்களில் கலந்து ஓர் குருவை அடைய வேண்டும் என்பது அவசியமா?

**சுவாமி :** பெரியோர்களின் சங்கங்களில் கூடுதல் அவசியம். உண்மை நிலையை அடைய குருவும் அத்யா வசியமே. ஆனால் இவ் விஷயத்தில் மிக்க கவனம் செலுத்த வேண்டும். இக் காலத்தில் உண்மையான குருமார்கள் கிடைப்பது மிக அரிது. வேஷதாரிகள் அதிகரித்திருக்கவே உண்மையான குருக்கள் மறைந்திருந்து சுய ஆத்ம சாக்ஷாத்காரத்தை அநுபவிக்கின்றனர். உலகில் அநேக சத்

குருக்களுமிருக்கின்றனர். ஆனால் அவர்களை அடைவது எளிதல்ல. அப்படிக் கிடைப்பினும், அவரவர் பாக்கியத்திற் கேற்ப ஏதாவதொரு 'சத்' வாக்கியத்தையே உபதேசிப்பர். பயனற்ற கதைகளைப்பேசி வீண் பொழுதுபோக்க மாட்டார்கள். ஆகையால், குருவைத் தேடுவதில் அவசரப்படக் கூடாது.

**பக்தன் :** அப்படியானால் இவ்வுலகில் வேறு மார்க்கம் என்ன?

**சுவாமி :** ஆகையால் வேதம், சாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியவற்றைப் படித்து அநுபவ ஞானத்தின் மூலம் அநுசரித்து, அவற்றின் பொருளைப் பண்டிதர்களின் மூலம் அறிந்து, அதன்படி ஒழுகி, அப் பரமாத்மாவே குரு, தெய்வம் எனக் கருதித் தியானித்தால், அக் கிரந்தங்களே உனக்கு வழி காட்டும். எதன் நிமித்தமாக உன் மனம் ஆண்டவனிடம் லயிக்கச் செய்கிறதோ அதையே உன் குருவாக ஏற்றுக்கொள். குருவாகப் பாவித்து, பகவானின் தீவிரப் பிரேமையினால் சாதனை புரிந்தால், அப் பரமாத்மாவே உனக்குச் சத்குருவாகச் சாக்ஷாத்கரித்து உபதேசிப்பார். அல்லது உன் சாதனையின் பயனாக ஒரு சத்குருவே உனக்குத் தோன்றி அருள்புரிவார்.

**பக்தன் :** ஆனால், தற்காலத்தில் சில பெரிய மகான்கள் கேட்போர் யாவருக்கும் உபதேசமளிக்கின்றனரே, அவர்கள் சத்குருக்களா, அல்லவா?

**சுவாமி :** அவர்கள் சரியானவரா அல்லவா என நான் கூறமாட்டேன். அவ்வளவு எளிதில், முன்பின் யோசியாமல், சீடனின் யோக்கியதையை அறிந்துகொள்ளாமல், உபதேசிக்கத்தக்க அருகதையுள்ளவனா எனச் சோதித் தறியாமல், அக் கணமே உபதேசிப்பதென்பது சத்குருவின் லக்ஷணமல்ல என்பதை மட்டும் உறுதியுடன் கூறுவேன்.

**பக்தன் :** ஆனால், சுவாமி! நான் ஒரு தவறு இழைத்து விட்டேன். எவரோ ஒரு மகான் எங்கள் கிராமத்திற்கு வந்திருந்தார். யாவருக்கும் அவர் உபசேதம் அளித்துக்

கொண்டிருக்க யானும் சென்று நமஸ்கரித்து எனக்கும் ஏதேனும் உபதேசித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தேன். அம் மகான் உபதேசித்தருளின மந்திரத்தை ஸ்மரித்துக் கொண்டிருந்தேன். சில நாட்களுக்குப் பின், அம் மகான் வேஷதாரி என அறிந்தேன். அந் நாள்தொட்டு எனக்கு அந் நாமத்தில் நம்பிக்கையற்று, அம் மந்திரத்தை விட்டு விட்டேன். அது சரியா, தவறா?

**சுவாமி :** *அது தவறு என்பதில் ஐயமென்ன? முற்றிலும் தவறே. நீ உபதேசம் பெறுவதற்கு முன்பே மேற்கூறிய படி குரு சிஷ்யனின் யோக்கியதைகளை எவ்விதம் ஆலோசிக்க வேண்டுமோ அவ்விதமே சிஷ்யனும் குருவின் யோக்கியதாம்சங்களையும், நடவடிக்கைகளையும் ஆராய்ந்தறிந்திருக்க வேண்டும். அப்படி யோசியாமல் அவசரப்பட்டு உபதேசத்தைப் பெற்றது முதல் தவறு. அல்லது, குருவுக்கு யோக்கியதையில்லாவிடின், பெற்ற மந்திரத்தின் மதிப்பிற் கேனும் அல்லது பகவானின் நாமத்தை எத்தனை இடையூறு நேரினும் பெற்ற தீக்ஷையை விடமாட்டேன் என்று நீ செய்த சத்தியத்தையும் மீறி, பிறர் குற்றத்தைத் தூய நாமத்தின் மீது காட்டுவது இரண்டாவது பிழை. உபதேசத்தைப் பெறுவதற்கு முன் வேண்டிய அளவு காலம் பெற்று உண்மையும் திட நம்பிக்கையும் ஏற்பட்டபின் உன் மனத்திற்கு விருப்பமிருப்பின் பெற்றுக்கொள்ளலாம். ஒரு முறை தீக்ஷை பெற்ற பின் எப்படிப் பட்ட துன்பம் வரினும் விடாமல் ஸ்மரித்துக் கொண்டிருக்க வேண்டும். அதனால் எவ்வித தோஷமும், பாவமும் உன்னைத் தீண்டாது. அவ்வாறின்றி அவசரப் பட்டு, பெற்றுக்கொண்ட மந்திரத்தை அலக்ஷியப்படுத்திய குற்றம் உன்மீது சுமத்தப் படுவதுடன், நீ குற்றமற்றவன் என நான் எவ்விதம் கூறுவேன். விருப்பமில்லாவிடினும், எவ்வித சந்தேகம் உன் மனத்தில் தோன்றினும், உனக்கு விருப்பமில்லாத நாமத்தைப் பெறக் கூடாது. அங்கீகரித்துக்கொண்ட பின் விட்டு விடவும் கூடாது.*

**பக்தன் :** *அப்படித் தவறினால் யாது நேரிடும்?*

**சுவாமி :** பேதையே, குரு துரோகத்திற்காகவும், தெய்வத்தை அலக்ஷியப்படுத்தியதற்காகவும் யாது நேரிடு மெனின், அழுகிய விதையானது மறுபடியும் முளைத்து விருக்ஷமாகாது.

**பக்தன் :** அந்த யோக்கியதை எங்களுக்கு இல்லா விடில் குருவே பிரசாதித் தருளினால் !

**சுவாமி :** அப்படிப்பட்ட குரு குருவல்ல. அப் பிழை உன்னைச் சாராது. அதற்கான தோஷம் குருவையே சாரும்.

**பக்தன் :** சீடன் குருவிற்களித்த வாக்கின்படி நடந்து, குரு எப்படிப்பட்டவராயினும் சிஷ்யனின் பண்பு மாறாமல் எப்போதும் போல் குருவைக் கௌரவித்து ஒழுகினால் சீடன் மேன்மையானவனாவானா?

**சுவாமி :** ஆம், அதில் சந்தேகமென்ன? ஏகலைவனின் கதையை அறிவாயா? துரோணாச்சாரியானவர் சீடனாக ஏற்காவிடினும், சீடனானவன் அவரைக் குருவாகப் பாவித்து, அவருடைய ஓவியத்தைத் தன் குருவெனக் கற்பனை செய்து சகல வித்தைகளையும் பயின்றான். அந்தோ! இறுதியில் அக் குரு அவனுடைய கையின் பெரு விரலைக் குரு தட்சணையாகக் கேட்க, அவன் அக்கணமே தன் பெரு விரலைத் துண்டித்துத் தட்சணையாக அர்ப்பணித்தனன், குருவின் துரோகத்தை ஏகலைவன் சிந்திக்கவுமில்லை.

**பக்தன் :** அளித்தென்ன பயன்? தன் வித்தை குலைக் கப்பட்டதல்லவா! எவ்வளவு பயின்றும் பயனற்றதாகி விட்டதே!

**சுவாமி :** வித்தை உபயோகமற்றதாகி விட்டதே ஒழிய, வித்தையினால் அவன்பெற்ற நற்பண்பு என்றும் அழியாதல்லவா? அவன் பெற்ற அந் நல்லொழுக்கத்தினால் என்றென்றும் துலங்கிக் கொண் டிருக்கிறான் என்பதே அத்தாட்சி.

**பக்தன் :** நடந்தது நடந்தேறிவிட்டது. இனியாகிலும் வைராக்கியத்தைக் கடைப்பிடிப்பேன். தாங்கள் ஏதேனும் உபதேசித்தருளவேண்டும்.

**சுவாமி :** இரவெல்லாம் இராமாயணம் கேட்டு, விடிந்தவுடன் சீதை இராமனுக்கு என்ன உறவு? என்பதைப் போன்றிருக்கிறது, நீ கேட்பது. உன் பாக்கியமும், உன் யோக்கியதையும் பக்குவநிலையையடைந்தவுடன் தானாகவே சித்திக்கும். நீ கேட்க வேண்டிய அவசியமில்லை. சிஷ்யன் தனக்குத் தானே தன் யோக்கியதையையும், தன்னடக்கதையும் அறியமாட்டான். உன் அறிவையும், உறுதியான மன நிலையையும் அறிந்து குருவே உனக்குப் பிரசாதித்தருளுவார். இரண்டு, மூன்று முறை உபதேசம் பெறுவது தவறு. உபதேசம் என்பது ஒன்றேயன்றி இரண்டல்ல. அப்படியின்றி விரும்பியபோது ஒன்றைவிட்டு மற்றோர் உபதேசத்தைப் பெறுவது கற்பிழந்த பெண்ணின் நிலையைப் போன்றது.

**பக்தன் :** அப்படியானால் இப்போது என் கதி என்ன? விமோசனமே கிடையாதா?

**சுவாமி :** செய்த தவறுக்கு மனம் வருந்தி, பக்தி சிரத்தையுடன் முதலில் உபதேசித்த நாமத்தையே தியானம் செய். ஸ்மரணைக்கு, உன் மனத்திற்குகந்தபடி எத்தனை நாமங்கள் வேண்டினும் ஸ்மரிக்கலாம். ஆனால் தியானத்திற்கு உபதேசம் பெற்ற நாமத்தை மட்டுமே தியானிக்க வேண்டும். எப்படிப்பட்ட சமயத்திலும் அப் புனித நாமத்தை மாற்றக் கூடாது. இவ்விதம் மனப்பூர்வமாகவும், விடாமுயற்சியுடனும் முயற்சித்தால் நிச்சயம் வெற்றி பெறுவாய்.

**பக்தன் :** இன்று ஓர் சுபதினம். என் உள்ளத்தில் இருந்த சந்தேகங்கள் யாவையும் தாங்கள் தெளியவைத்துப் பறந்தோடச் செய்தீர். இதுவே தாங்கள் எனக்களித்த உபதேசமாகும். இதை விட வேறு உபதேசம் எனக்குத் தேவையில்லை. தாங்கள் கூறியவாறு உபதேசங்களினாலேயே சந்தேகங்கள் தோன்றுகின்றன. இவ்வறிவுரைகளினால் என் சந்தேகங்கள் நசித்து விட்டன. மிக்க களிப்படைகிறேன். நமஸ்காரம். சென்று வருகிறேன். வேறேதேனும் புதிய சந்தேகங்கள் தோன்றின் அச் சுமையைத் தங்களிடம் இறக்கிவிட்டு, நான் தங்களிடமிருந்து மகிழ்ச்சியை வாரிச்

செல்கிறேன். தாங்கள் கட்டளையிட்டால் அடுத்த மாதம் வருகிறேன்.

**சுவாமி :** நன்று! மகனே, உன்போன்றவர்கள் சந்தேகங்களினால் குழப்பமடையாமல் அவற்றைத் தெளிவாக அறிந்து, சத்தியத்தைக் கடைப்பிடித்து, பொன்மொழிகளைக் கேட்டு, சந்தோஷத்துடன் ஸ்மரித்துக்கொண்டிருக்க வேண்டும். அதையே நான் கோருகிறேன். எப்போது வேண்டுமாயினும், எவ்வித சந்தேகமாயினும் தவறாமல் வந்து சந்தேகம் நீங்கித் தெளிவடை. உன்னில் நீயே குழப்பமடைந்து வீணில் வேதனை அடையாதே. குழப்பத்துடன் எவ்வித சாதனை புரிந்தாலும் விழலுக்கிரைத்த நீராகிப் பயனற்றதாகும். நன்று. சென்றுவா !